# மணலாற்றில் புலிகளின் அதிரடித்தாக்குதல்

# 7 ராணுவம் பலி; 3 பேர் காயம்; ஆயுதங்கள் மீட்பு

(மணலாறு)

மணலாறில் உள்ள சிறிலங்கா இராணுவத்தின் இலோன் தியேட்டர் இராணுவ முகாமிற்கும் முந்திரிகைக் குளம் இராணுவ முகாமிற்கும் இடையில் அமைந்திருந்த பிரதான காவல்அரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதுடன் பல ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை 7.30 மணியளவில் மேற்படி இராணுவ காவல் அரண் மீதுவிடுதலைப் புலிகள் அதிரடித்தாக்குதலைத் தொடுத்து அக்காவலரணை அழித்தபோது அங்கிருந்த ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் மூன்று இராணுவத்தினர் படுகாயம் அடைந்தனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper in Sri Lanka | பக்கங்கள்: 04 | விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம்: 01 | மாசி | (08 - 02 - 1991) | வெள்ளிக்கிழமை | ஓசை: 355

## வளைகுடாப் போரினால் பெரியம்மைநோய் அபாயம்

(ஜெனிவா)

வளைகுடாப் போரினால் மீண்டும் உலகில் பெரியம்மை நோய் பரவக்கூடிய சூழ்நிலை ஏற்படலாம் என உலகசர்வதேச சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது. பெரியம்மையைப் பரப்பும் நோய்க் கிருமிகள் ரஷ்யாவிடமும், அமெரிக்காவிடமும் கைவசம் உள்ளன. இந்தக் கிருமிகள் புட்டிகளில் அடைக்கப்பட்டு ஆய்வு கூடங்களில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# "வடக்கில் சிங்களவர் ஆதிக்கம் இது அப்பட்டமான பொய்"

### - யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை தலைவர் சிற்றம்பலம்

(யாழ்ப்பாணம்)

''சிங்கள பௌத்த பேரினவாதத்தின் ஆதிக்கம் வடபகுதியில் இருந்தது என்று கூறப்படுவது ஒரு அப்பட்டமான பொய் கிறிஸ்து சகாப்தம் ஆரம்பமாவதற்கு முன்னைய காலப்பகுதியிலேயே இந்தத் தீவின் மூன்றில் ஒரு பகுதியை தமிழர்கள் ஆட்சிசெய்து வந்துள்ளனர் என்பதற்கான ஆதாரத்தை சிங்கள நூல்களே எடுத்துக்கூறுகின்றன''

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக வரலாற்றுத்துறைத் தலைவர் கலாநிதி சி. க. சிற்றம்பலம் வல்லிபுர பொற்தகடு என்ற ஒரு தகட்டை ஆதாரமாகக் கொண்டு இந்தத் தீவில் ஒற்றையாட்சி நிலவியதற்கான சான்று உண்டு என கொழும்புப் பத்திரிகை மூலம் சிறிலங்கா அரசு பிரச்சாரம் செய்துவருவது சம்பந்தமாக எமது நிருபர் கேட்டபோது தெரிவித்தார்.

(3 ஆம் பக்கம் பார்க்க)

### சிறிலங்காவின் இனப்படுகொலை குறித்து

## மனிதாபிமானம் பேசும் உலகம் எதைச் செய்யப் போகின்றது?

### - மகேந்திரராசா

(லண்டன்)

தென் தமிழீழப்பகுதியில் இனப்படுகொலையை மேற்கொண்டுள்ளதோடு, 60,000 க்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்களையும் கொன்று குவித்த சிறிலங்கா அரசாங்கம் மீது தார்மீகம், மனிதாபிமானம் பேசும் உலகம் என்ன செய்யப்போகின்றது என்பதே இன்று எமது கேள்வியாகும் என விடுதலைப்புலிகளின் பிரதித் தலைவர் கோ மகேந்திரராசா பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் கேள்வி எழுப்பினார்.

சிறிலங்கா அரசோடு நாம் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தொடர்பு கொள்ளவில்லை என்பதை வலியுறுத்திய மகேந்திரராசா சில வெளிநாட்டு அமைப்புகள் தரகர்களாகச் செயற்பட முனைந்தன. ஆனால் அவர்களது தொடர்புகளை மறைமுகத் தொடர்பு எனக் கொள்ளமுடியாது என்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வளைகுடாவைப் பின்பற்றி சிறிலங்காவின் செய்திகள்

சிறிலங்கா அரசும் யுத்த செய்திகளை வளைகுடாப் பாணியில் வெளியிட்டு வருகிறது. ஈராக்கில் இத்தனை தடவை தாக்கினோம் என்று அமெரிக்காவும்; இஸ்ரேல், சவூதி அரேபியா மீது இத்தனை தடவை தாக்கினோம் என்று ஈராக்கும் செய்தி வெளியிடுவதுபோல் ஒமந்தை, தாண்டிக்குளம் பகுதியில் 20 தடவை விமானத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என சிறி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றைய ஹெலித் தாக்குதலில் கணவன், மனைவி காயம்

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு இராஜவீதியில் பொதுமக்கள் குடியிருப்புகள் மீது சிறிலங்கா விமானப் படையின் ஹெலிகொப்டரில் இருந்து ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் கணவனும், மனைவியும் படுகாயம் அடைந்தனர்.

நேற்று இரவு 7 மணியளவில் ஹெலிகொப்டர் ஒன்று இப் பகுதிமீது பலமுறை வட்டமிட்டு சுலிபர் தாக்குதலையும் இடையிடையே ஷெல் தாக்குதலையும் மேற்கொண்டது.

இத்தாக்குதலின் போது பாதுகாப்பிற்காக வீட்டின் தாழ்வாரப்பகுதியில் நின்ற கல்வியங்காடு இராஜவீதியைச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பிந்தாமல் அனுப்பவும்

ஈழநாதம் முதலாண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தும் போட்டிகளின் முடிவுத்திகதி 10-02-1991 ஆகும். எக்காரணத்தை முன்னிட்டும் முடிவுத் திகதி பின் போடப்பட மாட்டாது என்பதனால் படைப்புக்கள் இத்திகதிக்குப் பிந்தாமல் அலுவலகத்திற்கு கிடைக்கச் செய்யுமாறு கோருகிறோம்.

- ஈழநாதம்

## குடாநாட்டின் பலபாகங்களிலும் மாவீரர்களுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தச்சன்காட்டுச் சந்தி இராணுவ முகாமைத் தகர்க்க முன்னின்று போராடி வீரமரணமெய்திய போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தி நேற்று யாழ். குடாநாடு முற்றுமுழுதாக சோகத்தில் ஆழ்ந்தது.

வீதிகளில் சிறுப்புக் கொடியும், மண்ணை நோக்கும் தோரணங்களின் கூர் முனைகளும் சோக இசையும் போராளிகளின் உடல்கள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த இடமெங்கும் காணப்பட்டது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## "குண்டுகளைப் போடாதே சம்பளத்தைப் போடு"

(யாழ்ப்பாணம்)

''குண்டுகளைப் போடாதே சம்பளத்தைப் போடு'' என்று நேற்று வடபிராந்திய போக்குவரத்துச் சபை தொழிலாளர்கள் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தினர். இந்த ஆர்ப்பாட்டத்தின் முடிவில் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் கையொப்பமிட்ட மகஜர் ஒன்றும் யாழ். அரச அதிபர் இன்றன்அல்பிரட்டிடம் கையளிக்கப்பட்டது.

இவர்களால் கையளிக்கப்பட்ட மகஜரில் முக்கியமாக ஊழியர் எதிர்நோக்கும் நெருக்கடிகள்பற்றி குறிப்பிடப்பட்டிருந்தன.

## தமிழக போலிஸ் படையில் புலிகளிடம் பயிற்சி பெற்றோர்

### - வாழப்பாடி ராமமூர்த்தி

(சென்னை)

தமிழக பொலிஸ் படையில் விடுதலைப் புலிகளால் பயிற்சி பெற்றவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதால் உடனடியாக மத்திய அரசாங்கம் தலையிட்டுப் இந்த நியமனங்களைத் தடுத்து நிறுத்துமாறு தமிழ் நாட்டு இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மீட்பு நிதி வழங்க மீண்டும் ஒழுங்குகள்

(நமது நிருபர்)

தமிழீழ மீட்பு நிதிக்குப் பங்களிக்கவிரும்பும் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்கள் வரும் 10-02-91 ஆம்திகதியும், கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்கள் 16 - 02 - 91, 17-02-91 ஆம் திகதிகளிலும், பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச்சேர்ந்தவர்கள் 18 - 02 - 91 ஆம்திகதியும் நிதி சேகரிப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப்பிரிவு ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

மேற்படி உதவி அரசாங்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**சமூகக்கல்வி**

மெய்யப்பனின் சமூகக்கல்வி - ஆண்டு: 11 (புதிய பாடத்திட்டம்) ஆசிரியர்: ந தர்மபாலன். சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்: (R-1084)

**ஏலவிற்பனை**

வைரவ ஈஸ்வரி ஜெட்டிக்கொட்டாவடி கோவில் வீதியிலுள்ள பெரிய வளவையும், ஒரு வேம்பமரமும் 91. 02. 17 ஆம் திகதி காலை 11. 00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் முழுப்பணத்தையும் உடன் செலுத்த வேண்டும்; தர்மகர்த்தா சபை

(B/1985)

**மில்க்வைற் திரவ சவர்க்காரம்**

**Milk White Liquid Soap**

வீட்டுச்சலவைக்குச் சிறந்தது. அழுக்கை அகற்றுவதில் தனிச்சக்தி வாய்ந்தது. புலோலி ப.நோ.கூ. சங்கத்திலும் விற்பனையாகிறது

(B 1992)

## "தேம்பாவணி"

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றமும், கத்தோலிக்க கலை இலக்கிய வட்டமும் இணைந்து நடாத்தும் "தேம்பாவணி" விழா பங்குனி மாதத்தில் நடைபெற உள்ளது.

இவ்விழாவின் முன்னோடி நிகழ்ச்சியாக நாடக, நாட்டுக் கூத்து மற்றும் வில்லுப்பாட்டு, நடனம் போன்ற கலைநிகழ்ச்சிகள் போட்டிகள் நடைபெற உள்ளன.

## ஆசிரியர் பயிற்சிக்கு 550 பேர்

(யாழ்ப்பாணம்)

இவ்வருடத்துக்கான ஆசிரியர் கலாசாலைக்கான மாணவர்கள் ஐநூற்று ஐம்பது பேர் வரையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ். கல்வித் திணைக்கள பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார். (லோ)

## ஏப்ரலில் தேர்தல் நடத்த விருப்பம்

(டில்லி)

தமிழக சட்டமன்றத் தேர்தல் ஏப்ரல் மாதத்தில் நடக்க வேண்டும் என தமது கட்சி விரும்புவதாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை புதுடில்லியில் செய்தியாளர்களை சந்தித்த போது இவர் இந்திரா காங்கிரஸ் கட்சியும் ஏப்ரல் மாதத்தில் இந்தத் தேர்தலை நடத்த விரும்புகின்றது என்றும் தெரிவித்தார்.

**YEAR 9, 10, 11**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

**09 02 91**

**8.00 a.m**

**SCIENCE ACADEMY, NALLUR.**

(R- 1029)

## 60th Commemoration Day

We express our deep Sorrow and Sympathy to the bereaved family of late Mr. J. Arudpirakasam, former teacher of J/V. M. V. Point Pedro.

Yr. 11A Students of Guides,
J.Methodist Girls High School,
Point Pedro.

(R/1090)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தமிழீழ மலர்வுக்காக
12 - 07 - 70

தமிழீழ மண்ணுக்காக
21 - 01 - 90

திதி:
08 — 02 — 91

**வீரவேங்கை அன்பழகன்**

**( ரவி )**

போர் முனைக்குச் செல்லும் போராளிகள்
திரும்பி வருவார்கள் நிச்சயமாக
எம் நினைவுகளிலும் கனவுகளிலும்
வாழ்கின்ற வேங்கைகளே
நீங்கள் காலத்தால் அழியாத
காவிய நாயகர்கள்
ஆம் தமிழீழ மண்ணின் காவிய நாயகர்கள்

08 - 02 - 1991 இன்று நண்பகல் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் உறவினர், இயக்க உறுப்பினர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தம்பகாமம், பளை. உறவினர்கள்.

R/1086

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பு
13 - 02 - 1971



அன்னியன் அழிப்பு
08 - 02 - 1989

செல்வன்

**தியாகராஜா மணிவண்ணன்**

அன்னியனின் வெறித்தனத்தால்
நள்ளிரவில் நித்திரையில் வைத்துன்னை
துயில் எழுப்பிச் சென்றனரே - வஞ்சகர்கள்
எட்டாவது நாளன்று உன்னுயிரைக் குடித்தனரே
இதை எண்ணும் போதெல்லாம் - எம்
நெஞ்சனைத்தும் வேகுதடா - எம்
அன்புச் செல்வமே உம் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிறவுண் றோட்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

உன் பிரிவால் வாடும்
அம்மா, அப்பா, அத்தான்,
சகோதரர்கள்.

(R-1089)

**DHL WORLDWIDE EXPRESS**

**வெளிநாட்டுக் கடிதங்கள் உடனுக்குடன் சம்பந்தப்பட்ட நாடுகளிலேயே தபாலில் சேர்க்கப்படும்.**

விபரங்களுக்கு:

**Cosmos Marketing Services**

337, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (B-1988)

## New Master Institute

B. M C Lane,
**JAFFNA.**

**92 A/L**

**விலங்கியல்**

**- திரு. நாகநாதன்**

- இழையவியல்
- தொகுதிகள்

**ஆரம்பம்: 10-02-1991**

ஞாயிறு காலை 8-00 மணி

(R/ 1984)



## நினைவு கூருகின்றோம்

**பெப்ரவரி 8**

1986 ஆம் ஆண்டு பருத்தித்துறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த
2 ஆம் லெப். முரளி (வே. தெய்வேந்திரசிகாமணி - வல்வெட்டித்துறை)
தர்மராஜன்/உதயன் (சு. ஜேசுதாஸ் - பருத்தித்துறை)
சோமன் (ஞா. ஜெரு ஞானதாஸ் - பருத்தித்துறை)

1987 இல் வீரமரணமடைந்த
பவன் (சி குபேரசிங்கம் - திருமலை)

1988 இல் இந்திய இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின் போது வீரமரணமடைந்த
நடேசன்

இதே ஆண்டு தேசவிரோத சக்திகளால் சுட்டுக்கொலைப்பட்ட
✱ சுனில் (வடிவேல் சுந்தரசாமி - தங்கநகர்)

1989 இல் முல்லைத்தீவு உடையார்கட்டுப் பகுதியில் இந்திய இராணுவ சுற்றி வளைப்பின்போது வீரமரணமடைந்த
லெப். செல்லத்தம்பி (ஆ. மகேந்திரம் - புதுக்குடியிருப்பு)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

✱ மேற்குறிப்பிடப்பட்டிருக்கும் போராளி சுனில் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்ட மாவீரராவர்

**— விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B-1987)

# விசேட பொலிஸ் அதிரடிப்படை தமிழகத்தில் அமைக்க சிபார்சு

(சென்னை)

தமிழ்நாட்டில் தமிழ்ப் போராளிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த விசேட அதிரடிப் பொலிஸ் படையணியொன்று அமைக்கப்படவேண்டும் என தமிழ்நாட்டு காவல்துறை ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

இந்தப் பொலிஸ் படைக்கு ஏ. கே. 47 ரக துப்பாக்கிகள் வழங்கப்படவேண்டும் எனவும் ஏனைய பொலிஸாரின் சம்பளத்துடன் மேலும் அச் சம்பளத்தின் மூன்றிலொரு பாகம் அவர்களுக்கு சம்பளமாக வழங்கப்படவேண்டும் எனவும் அந்த ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

## டில்லி முடிவை பரிசீலிக்க அனைத்துக்கட்சி கூட்டம்

(டில்லி)

அமெரிக்க இராணுவ விமானங்களுக்கு எரிபொருளை வழங்குவதற்கான இந்திய அரசாங்கத்தின் முடிவை பரிசீலனை செய்ய அனைத்துக்கட்சிக்கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கான ஒழுங்குகளை இந்திரா காங்கிரஸ் மேற்கொண்டுள்ளது.

அலகபாத்தில் நேற்றுமுன்தினம் பேசிய இந்தியப் பிரதமர் சந்திரசேகர் இதுகுறித்த அரசாங்கத்தின் எந்த முடிவும் அரசியல் கட்சிகளின் கருத்துக்களைச் சார்ந்து இருக்கும் என்று கூறியதை அடுத்து இந்தக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்படுவதாக இந்திரா காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதி தெரிவித்தார்.

இதேவேளை ஈராக் அமீரின் செய்தியினைக் கொண்டு சிறப்புத் தூதுவர் அப்துல் ரகுமான் அல்பொாடி இந்தியா சென்றுள்ளார். வளைகுடாப் போரை முடிவிற்குக் கொண்டுவரும் இந்தியாவின் முன்முயற்சி தொடர்பாக இந்தச் செய்திகள் இருக்கலாம் என்று இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரி தெரிவித்தார்.

## திரியாய் முகாம் மீது புலிகள் ஷெல் தாக்குதல்

(திருக்கோணமலை)

திருமலை மாவட்டத்தில் உள்ள திரியாய் என்ற இடத்தில் அமைந்துள்ள இலங்கை இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் ஷெல்தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் மேற்படி முகாம் மீது விடுதலைப்புலிகள் இரண்டு அங்குல ஷெல் தாக்குதலை பத்துக்கும் மேற்பட்ட தடவைகள் மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேத விபரங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

## கஜபாகு றெஜிமன்ட் தளபதி விரைவில் ஓய்வு பெறவுள்ளார்

கஜபாகு றெஜிமன்ட் முதலாவது பிரிவின் தளபதியான கேர்ணல் கொதபாய ராஜபக்ஸ இராணுவத்திலிருந்து விரைவில் இளைப்பாறவுள்ளார். இவர் அம்பாந்தோட்டை மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஸவின் சகோதரராவார். 1989 ஜூன் மாதத்தில் வடக்கிலும், கிழக்கிலும் போர்முனையில் விடுதலைப் புலிகளுக்கெதிரான நடவடிக்கையில் ஈடுபட்டவர். கேர்ணல் கொதபாயவின் ஓய்வைத் தொடர்ந்து மேலும் பல அதிகாரிகளும் இராணுவத்திலிருந்து வெளியேறலாம் என்று கொழும்பில் இராணுவ வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது.

---

வளைகுடாப்

வைக்கப்பட்டுள்ளதாகவும் ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. மற்றும் இஸ்ரேலிலும், தென்னாபிரிக்காவிலும் இந்தக் கிருமிகள் உள்ளன என்று உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தக் கிருமிகள் வளைகுடாப்போரில் பாவிக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக சர்வதேச சுகாதார நிறுவனம் அதன் செய்திக்குறிப்பொன்றில் எச்சரித்துள்ளது.

1978 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின்படி கிருமியுத்தம் தவிர்க்கப்படவேண்டியதாகும். உலகில் பெரியம்மைநோய் முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளது என்று சர்வதேச சுகாதார நிறுவனம் அறிவித்த பின்பு 1980களில் பெரியம்மை தடுப்பூசி போடுவது கைவிடப்பட்டுள்ளது.

---

வளைகுடாவைப்

லங்கா அரசு செய்தி வெளியிட்டுள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலையில் இருந்து தமது விமானங்கள் இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாகவும், இந்தத் தாக்குதலில் குண்டுச்சத்தங்கள் வவுனியா நகருக்குக் கேட்டதாகவும் சிறிலங்கா அரசாங்கம் தெரிவித்தது.

---

நேற்றைய

சேர்ந்த சின்னத்துரை (70 வயது) இவரது மனைவி சி. இராசம்மா (62 வயது) ஆகிய இருவரும் வீட்டு முற்றத்தில் ஷெல் வீழ்ந்து வெடித்ததில் படுகாயமுற்றனர்.

மேலும் ஒருவர் சிறுகாயத்திற்குள்ளாகினார். (ச)

---

தமிழக

வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதை மத்திய அரசாங்கம் செய்யாவிட்டால் மேலும் பல சிக்கல்கள் உருவாக வாய்ப்பேற்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

---

குடாநாட்டின்

யாழ் குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் பரவலாக இந்த மாவீரர்களின் உடல்களுக்கு தமிழ் மக்கள் தமது கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்தினர்.

பண்ணை சந்தி, இயக்கச்சி சந்தி, கொடிகாமம் சந்தை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, அரியாலை, குருநகர் சனசமூக நிலையம், கோப்பாய், தெல்லிப்பழை, திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் போராளிகளின் உடல்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன. இது தவிர ஒவ்வொரு போராளிகளினது வீடுகளிலும் வீட்டுக் கிரிகைகளுக்காகவும் உற்றார் உறவினர்களின் அஞ்சலிக்காகவும் வைக்கப்பட்டன.

பரவலாக ஹெலி தாக்கு

இந்த அஞ்சலி நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த அதேவேளை இந்த நிகழ்ச்சிகளை குழப்பும் நோக்குடன் ஹெலிகொப்டரில் றொக்கட் தாக்குதலும், கைக்குண்டு வீச்சும், துப்பாக்கி வேட்டுகளும் தீர்க்கப்பட்டது. ஹெலிகொப்டர்கள் பாரிய தாக்குதல்களை மேற்கொண்டபோதிலும் இந்த அஞ்சலி நிகழ்ச்சிகள்யாவும் திட்டமிட்டபடியே நிறைவேறியது குறிப்பிடத்தக்கதாகும். (ச) (21 (20)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு பெப்ரவரிமாதம் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

---

## வவுனியாவில் காயமடைந்தோர் மந்திகையில்

(மாங்குளம்)

வவுனியாவில் கடந்த 3 ஆம் திகதி ஹெலிச்சூட்டுக்கு இலக்கான இருவர் மந்திகை வைத்தியசாலையில் படுகாயத்துடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நெல்லியடியைச் சேர்ந்த திருமதி சிவகாசிப்பிள்ளை (வயது 50) அதே இடத்தைச் சேர்ந்த குலம் (வயது 40) ஆகிய இருவரும் படுகாயத்துடன் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

---

தமிழீழ

எதிரி பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் தத்தமது சிற்றூரவைகளினால் குறிப்பிடப்படும் இடங்களில் ஒதுக்கப்பட்ட நேரத்தில் தமது பங்களிப்பைச் செலுத்திக் கொள்ளலாம் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் நிதிப் பொறுப்பாளர் செ. தமிழேந்தி தெரிவித்துள்ளார்.

---

மனிதாபிமான

றார்.

போர்தொடங்கி ஆறுமாதமாகிவிட்ட நிலையில் உங்களுடைய இராணுவ பலம் பற்றி என்ன கருதுகிறீர்கள் என்ற கேள்விக்குப் பதிலளித்த அவர், எமது படைபலம் குறித்து எப்போதும் நாம் வெளியிட்டது கிடையாது ஆனால் சிறு கெரில்லாக் குழுவாக இயங்கத்தொடங்கிய நாம் ஆயிரக்கணக்கில் ஒரு தேசியப்படையாக மலர்ந்திருக்கிறோம்.

அடுத்த சில வாரங்களில் அல்லது மாதங்களில் இராணுவம் யாழ்ப்பாணம் மீது தாக்குதல் நடத்த முயற்சி செய்யுமா? எனக் கேட்டபோது தாக்கும் என்றே எப்போதும் நாம் எதிர்பார்த்துள்ளோம். இன்று வளைகுடாப் போரில் உலகம் கவனஞ்செலுத்தியுள்ள வேளையில், சிறிலங்கா பெருமளவில் இங்கு விமானக்குண்டு வீச்சில் ஈடுபட்டு வருகிறது. முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் அகதி முகாம் தாக்கப்பட்டு இருபத்தியேழுபேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் பாடசாலை அகதிமுகாம் தாக்கப்பட்டுள்ளது. வல்வெட்டித்துறையில் அறுநூறுக்கும் மேற்பட்ட வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் பரவலாக குடிமக்கள்வாழும் பகுதிகள் மீது தாக்குதல் நடத்தப்படுகிறது.

அண்மையில் வல்வெட்டித்துறைமீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு ஏதாவது விசேட காரணங்கள் உண்டா எனக்கேட்டபோது;

வல்வெட்டித்துறை மட்டுமல்ல. தமிழீழத்தின் எல்லாப் பகுதிகளும் சிறிலங்காவினால் அழிக்கப்படுகின்றது. தென் தமிழீழப் பகுதிகள் அழிக்கப்படுகிறது. தினமும் இனப்படுகொலை நடத்தப்படுகிறது. எம்மைப்பொறுத்தவரை சிறிலங்காவின் அழிவிலிருந்து தமிழ்மக்களை விடுவிக்கும் வரை எமது போராட்டம் தொடரும் நாங்கள் என்ன செய்யப்போகிறோம் என்பதைவிட தார்மீகம், மனிதாபிமானம் பேசும் உலகம் என்னசெய்யப் போகிறது என்பதுவே எமதுகேள்வி என்றார்

---

# 22ஆம் நாள் போர்

### 12 தடவையாக ஸ்ஹட் தாக்குதல்

★ இஸ்ரேல் மீது நேற்று முன்தினம் மீண்டும் பன்னிரண்டாவது தடவையாக ஈராக் ஸ்ஹட் ஏவுகணையை மேற்கொண்டது. ஏவுகணை செலுத்தும் வாகனங்கள் பாதுகாப்புடன் தளத்திற்கு திரும்பி விட்டன என்றும் ஈராக் அறிவித்தது.

★ ஈராக்கின் தெற்கு நகரமான அல்நசைராவில் கூட்டுப் படைகளின் விமானக் குண்டுவீச்சினால் 32 சிறுவர்கள் உட்பட 200க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதாக அசோசியேற்றட் பிறஸ் ஏஜென்சி தெரிவித்தது.

### குடியிருப்புக்கள் தரைமட்டம்

★ ஈராக்கின் வடக்கே பொதுமக்களின் உடமைக்கு பெருமளவு சேதம் ஏற்பட்டிருப்பதாக வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் கூறுகின்றனர். இவர்களை ஈராக்கின் அதிகாரிகள் பாக்தாத்திற்கு 120 கிலோ மீற்றர் வடக்கே உள்ள ஒரு கிராமத்திற்கு அழைத்துச் சென்று அங்குள்ள சேதங்களை காண்பித்தனர். அங்கிருந்த 120 வீடுகளும் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன என்று பின்னர் அங்கு சென்ற செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

### 50,000 தடவை விமானத் தாக்குதல்

★ ஈராக் மீது இதுவரை 50,000 முறை விமானத் தாக்குதலை மேற்கொண்டதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

★ வளைகுடாப் போரில்தரைத் தாக்குதலுக்கான ஆயத்தங்களை அமெரிக்காவும் அதன் கூட்டுப்படைகளும் மேற்கொண்டு வருகின்றன. இதற்கு ஆயத்தமாக அமெரிக்கா 17,000 கடலுமிகள்படை வீரர்களையும், பிரித்தானியா 20 000 ராங்குகளுடன் கூடிய ராணுவத்தையும் சவூதி அரேபியாவின் எல்லைக்கு அனுப்பி உள்ளன.

★ வளைகுடாப்போரில் சுமார் 10 லட்சம் இராணுவத்தினர் சம்பந்தப்பட்டிருப்பதால் இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின்னர் இடம் பெறும் மிகப் பெரும் போராக இது விளங்கும் என்று ஜேர்மனி குறிப்பிட்டுள்ளது.

★ ஈராக் வானொலி அறிவிப்பின் மூலம் ராஜிய உறவுகளை துண்டித்துக்கொள்ள முடியாது என்று பிரித்தானிய அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

★ வளைகுடாப் போரினால் இஸ்ரேலுக்குத்தான் முக்கிய பயன் கிடைக்கும் என ஜோர்டானிய மன்னர் ஹுசைன் தெரிவித்தார் அத்துடன் அமெரிக்கா திட்டமிட்டே ஈராக்கை அழித்து வருகிறது என்றும் குற்றஞ்சாட்டினார்.

★ ''சமாதானத்திற்கான பாதை கடினமானது என்றும், ஆனால் வளைகுடாவில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு கூட்டுப்படைகள் வரலாற்று ரீதியான வாய்ப்பை வழங்கும்'' என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

★ அமெரிக்க கப்பலான விஸ்கொன்சன் மற்றப் படைகளுடன் சேர்ந்து ஈராக்கிய நிலைகளைத் தாக்கி வருகின்றது

★ ஈராக்கின் இரண்டு ஹெலிகள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக அமெரிக்க தரப்பில் கூறிக் கொள்ளப்படுகிறது.

★ குவைத்தில் பல எண்ணெய் வயல்களுக்கு ஈராக் தீ வைத்துள்ளதாக றியாட்டிலுள்ள ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

★ ஈராக்கில் குடியிருப்புக்கள் மீதும், வர்த்தக ஸ்தாபனங்கள் மீதும் குண்டுகள் வீசப்பட்டன என்ற ஈராக்கின் குற்றச்சாட்டை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் மறுத்துள்ளார் அத்தோடு ஈராக்கிற்கு ஆதரவான ஜோர்டான் மன்னரின் போக்கையும் ஜோர்ஜ் புஷ் கண்டித்துள்ளார்.

★ ஜோர்டான் மக்களின் அன்பும் ஆதரவும் என்றும் ஈராக்கிய மக்களுக்கு உண்டு என மக்களுக்காற்றிய பேருரை ஒன்றில் மன்னர் ஹுசைன் தெரிவித்தார் மேலும் ஈராக்கிய மக்கள் வீர புருஷர்கள் எனவும் அவர் பாராட்டுத் தெரிவித்தார்

★ ஈரானின் சமாதான முயற்சியினை புறக்கணிக்க வேண்டாம் என அமெரிக்காவை சோவியத் யூனியன் கேட்டுக் கொண்டிருக்கிறது.

★ அமெரிக்காவின் முன்னாள் சட்டமா அதிபர் றாம்சே கிளார்க் ஈராக்கிலிருந்து யுத்தத்தின் அழிவுகளைப் பார்வையிட்டபின், அமெரிக்காவும் அதன் கூட்டு நாடுகளின் படைகளும் குடிமக்கள் வாழும் பகுதிகளைக் கடுமையாகத் தாக்கி வருவதாக சி. என். என் செய்தி ஸ்தாபனத்துக்குக் கருத்து வெளியிட்டுள்ளார். தலைநகரான பாக்தாத்தைவிட துறைமுக நகரமான பஸ்றா விமானத் தாக்குதலால் பெரிதும் சேதம் அடைந்துள்ளதென்றும், பெருமளவில் அப்பாவிப் பொதுமக்கள் மீதும், பொதுமக்கள் குடியிருப்புகள் மீதும் குண்டுவீச்சு நடத்தப்பட்டிருப்பதாக மேலும் தெரிவித்துள்ளார்

## மக்கள் மீது குண்டு வீசினால் விமானிகள் தண்டிக்கப்படுவர்

நாங்கள் போரில் ஈடுபட்டிருக்கிறோம் இறுதிவரை போராடுவோம் பொதுமக்கள் இப்பகுதியில் இருந்தினால் அது அவர்கள் இஷ்டம் என சிறிலங்கா பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா பத்திரிகையாளர் மாநாட்டில் கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

பொதுமக்கள் வாழும் பகுதிகள் மீது விமானத் தாக்குதல் நடத்தப்படுவதுபற்றியகேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில், விமான ஓட்டிகளுக்கு அவ்வாறான உத்தரவுகள் எதுவும் வழங்கப்படவில்லை. உத்தரவுகளை மீறிச் செயற்படும் படையினர் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவர் எனவும் கூறினார்

---

மணலாறறில்

சுமார் ஐந்து நிமிடங்கள் மட்டும் இடம் பெற்ற இந்த அதிவேக அதிரடித்தாக்குதலில் ரி 81, எல் எம் ஜி -1, இதற்கான ரவைக்கூடுகள்-4, ரி 81 ரகத் துப்பாக்கி-1, இதற்கான ரவைக்கூடுகள்-4 ரி 56 ரக துப்பாக்கி-3, இதற்கான ரவைகூடுகள் 13, எஸ். எல். ஆர். ரகதுப்பாக்கி-1, இதற்கான ரவைகூடுகள் 4, 303 ரகத்துப்பாக்கிகள் -4, இதற்கான ரவைக் கூடுகள் -4 ரி 81 ரக றைபிள்கைக்குண்டு-10, டட்பிவெடி-15, 303ரகரவைகள்-223, தோற்ரோரவைகள் 30 ஐ. எம்ரக ரவைகள் 710, சாஸசர் இவிப் -45 ஆகிய ஆயுதங்களை விடுதலைப்புலிகள் கைப்பற்றினர்.

மேற்படி தாக்குதல் இடம் பெற்ற சமயம் காவலரணின் இரு பக்கங்களிலும் உள்ள இராணுவ முகாம்களில் இருந்தும் நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் வெளியேறி வந்தனர். இவர்களை விடுதலைப்புலிகள் வழிமறித்து கடும் தாக்குதலை தொடுத்தனர்.

புலிகளின் தாக்குதலினால் பெரும் இழப்புக்களைச் சந்தித்த இராணுவத்தினர் பின்வாங்கி முகாம் திரும்பினர்.